

மலர்வு
1925.07.10

உதிர்வு
2007.07.05

# அமரர். தாமோதரம் இராஜரட்ணம்

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய் அன்பின் பொக்கிசமாய்

நாளும் இன்சொற்பேசி நானிலத்தோரை நேசிப்பவராய்

இறக்கும்வரை இன் முகத்தினராய் வாழ்வாங்கு வாழ்ந்து

இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

அமரர்

**திரு. தாமோதரம் இராஜரட்ணம்**

அவர்களின்

நினைவாக இந்நினைவு மலரை அன்னாரின்

பாததாமரைகளில் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம்சாந்தி

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"



# அமரர். திரு. தாமோதரம் இராஜரட்ணம்

மலர்வு
1925 . 07 . 10

உதிர்வு
2007 . 07 . 05

## திதி வெண்பா

மண்ணகம் போற்றும் பேராளன் இராஜரட்ணம்
விண்ணகம் சேர்ந்த நன்னாள் நன்னுபுகழ்
சர்வஜித் வருடம் சேர் ஆனிமாதம் தனிலே
ஆனிமாத அபரபக்க சஷ்டித் திதியாம் போற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங்கை கூட்டுஞ் செஞ்செற்
பெருவாக்கும் பீடும் பெருக்குமுருவாக்கும்
ஆதலால் வானோடுமானை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை

# தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலார்
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை – தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்றின் மாமுகக்
பண்ணவர் மலரடி பணிந்து போற்றுவாம்

## திருப்புகழ்

ஏறுமயிலேறிவிளை யாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கும் முக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி யரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்து குறைவிலாதுயிர்கள் வாழ
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தாமோதரம் இராஜரட்ணம் அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

மாணிக்கத் தீவாம் ஈழவளநாட்டில் முக்கனிகள்

கொண்ட யாழ்ப்பாணத்தில்

பழம் பதியாம் கரவையம்பதி தினலே

சைவவேளாளர் மரபுதித்த தாமோதரத்திற்கும்,

தாம்பத்திய நாயகி தங்கம்மாவிற்கும்

ஊனமிலா ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தைந்தில்

செம்மைசேர் ஆடிமாதம் பத்தாம் நாளில்

குலம் சிறக்கும் வண்ணமாய் இராஜரட்ணம் அவதரித்தார்

கண்டவரெல்லாம் வியக்கும் வடிவொடு,

சகுந்தலாதேவியின் அண்ணாவாக இனிதமர்ந்தார்

புள்ளிமானாய் அவர் துள்ளித்திரிவதைக் கண்டே

காலி சென். அலோசியஸ் கல்லூரியில் சேர்த்து வைத்தார்

பின்னர் தனிலே மாத்தறையில் ராகுல கல்லூரியிலே

பாங்குடனே ஆங்கிலத்தை கற்று தேறினார்

தமிழ் மொழியின் இனி மைகாண பரமேஸ்வராப் பள்ளியிலே

நல்வித்தகனாய் வளரவும், கலைகள் பல பயிலவும்

கண்டே பெற்றோர் பெருமை கண்டனர்

குமரப்பருவம் கண்டே நல்லாசிரியரானார்

பருவம் விளங்கும் காளையனாகி நின்றவேளையில்

கருணை விளங்கும் ஆழ்வாப் பிள்ளையின்

செல்வமகளாம் நன்மங்கை செல்லம்மாவை

சீர்பெறும் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத் தைந்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றோரும் மற்றோரும் மகிழக்கரம் பிடித்தார்.
நல்மனையாளோடு மனதார வாழ்ந்து நின்றே
கற்றவிதம் அறிந்தே தன்னிலை தெரிந்தே
உற்ற பொழுதும் செல்வம் தேடிப் பாடுபட்டார்.
நற்றவம் செய்தே நானிலம் போற்றப் பிள்ளைகள்
நான்கைப் பாங்குடனே, பெற்றே வளர்ந்தார்.
குலம் சிறக்க மூத்தமகளாய்க் கமலாதேவி
பத்து அகவை கடந்தே செல்வமகன் கணேஷ்சும்
நலம்பெருக கலாதேவியுடன் கௌசலாவும்
புகழ்பெருக பிள்ளைகளாய் வந்து வாய்த்தார்.
பிறந்த மண்ணில் சேவை செய்ய நினைத்தே
போக்குவரத்துச் சபை சேர்ந்தே கணக்குப் பரிசோதகராய்
பின்பு ஒருமுறை பலநோக்குச் சங்கமதில்
நெடுங்கேணியை நோக்கியே முகாமையாளரானார்
தெற்கில் வந்த வன்செயல்கள் விரட்டியடித்திடவே
நெற்குத்தும் ஆலை அமைத்தே தனிச் செல்வம் சேர்த்தார்
தேயிலைக் கம்பனியும் பின் போக்குவரவுச் சேவை செய்தார்
உடமை தன் மக்களை உயர்த்த எண்ணியே
மடமை கொண்டோர் என மற்றோர் பேசாமல்
கல்விக் கண் திறந்தே வாழ்வொளி சேர்த்தார்
மூத்த மகளை வைத்தியநாதனுக்கு மணம் பேசி முடித்தார்
இரண்டாம் மகனை சரோஜினிக்கு வதுவை செய்தார்
மூன்றாம் மகளை கமலேந்திரராஜிற்கும் சேர்த்து வைத்தார்
செல்வமகள் கௌசலாவை ஜெயமூர்த்திக்கும்
ஊரெல்லாம் வியக்கும் வண்ணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து வைத்தே அழகு பார்த்தார்

தொண்ணூறில் வந்த கலகமது கண்டே

செல்வம் பெருக்கும் வழியை நாடியே

பேரக்குழந்தைகளுக்காய் வாழ நினைத்தே

உற்ற பொழுதும் பிரியாது அவருடனே

பாட்டும், கூத்தும், ஓவியமும் சொல்லியே

மன நிறைவாய் வாழ்ந்து வரும் போதிலே

இரு குழந்தைகளை வெளிநாடு அனுப்பியே

அவர் வாழ்வு சிறக்கும் போதே மனமகிழ்ந்தார்.

கனடா, பிரான்ஸ் என மக்களோடு பேசியே

இன்பமுடன் பொழுதைப் போக்கி நின்றார்

பிள்ளைகள் நால்வரும் இன்பமாய் வாழ்ந்து வரும்வேளை

காற்றோடு வந்த மாயக்கயிறொன்று

அன்பு மனையாளை அள்ளிச் சென்றதே

துன்பமாய்த் துவண்டு போன போதிலே

பாய்ந்தோடும் தேனாறு நின்றது போல

உலகாளும் கதிரவன் அடங்கியது போல

வாய் நிறைந்த வண்தமிழ் வளராதது போல

விதியின் கதை சுழவரும் வேளையில்

எண்பத்து இரண்டாவது அகவை நெருங்கிவரும் வேளை

காலனை வென்றார் யாருள ரென

உறவுகளும் குடும்பமும் கலங்கி நிற்கவே

துயில்வது போலவே இராஜரட்ணம் இவ்வுலகை மறந்தார்

ஆனிமாத அபரபக்க சஷ்டி திதியில் இயற்கை வியக்க

மண்ணுலகை விட்டே விண்ணகம் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரி புலம்பல்

என் முன்னே பிறந்த அண்ணாவே
உன்னைக் காணாது துடிக்கின்றேன்
எங்கு சென்று மறைந்தனையோ
திருமண நாளை எண்ணி இருந்தவேளை
கண்டி சென்று மலர்கொண்டு வந்தாய்
மாலை தொடுத்தே மணம் செய்தேன்
மூத்தவனாய்ப் பிறந்த போதும்
சாவினிலும் முந்திச் சென்றனையோ
பாசம் காட்டி அழவைத்தே
பரலோகம் சென்றனையோ
மீண்டும் வந்து எனை பார்க்கமாட்டாயோ
நேசமுள்ள சோதரியாய்த் துடிக்கின்றேன்
ஆத்மா சாந்தி பெறத்துதிக்கின்றேன்.

## மகன் புலம்பல்

பாசமழை பொழிந்த தந்தையே
மோகம் செய்தே மறைந்து போனீரே
வாழும் வரை சோகம் தந்தே
மறைந்து போன மாயமென்ன
நீண்டகாலம் உமைப்பிரிந்தே
அகவை பலகடந்து சேர்ந்தேனே
அம்மா பிரிந்து சிலகாலம் செல்லமுன்னே
பிரிந்து சென்று விட்டீரே
தொலைபேசி அழைப்பெடுத்தே
அகமகிழ்ந்து பேசும் குரல் ஒடுங்கி
அடங்கிப்போன மாயமென்ன
அண்டமெல்லாம் கதிகலங்க
எமை விட்டு அகன்று சென்றீரே
மீண்டும் தந்தையாய்ப் பிறப்பெடுக்க
அனுதினமும் தெண்டனிட்டே அழுகின்றேன்.
ஆத்மா சாந்திபெறத் துதிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள்மார் புலம்பல்

எம்மருமை அப்பாவே

ஆசைமுகம் காட்டி மறைந்தனையோ

பேசமுடியாமல் துடித்து நின்கின்றோம்

பாசமுடன் பேசி துயர் மாற்ற மாட்டாயோ

தொலைபேசியில் சொன்ன செய்திகேட்டு

தொலைந்த உறவைத் தேடி நின்றேன்

கட்டியணைத்தே சேர்ந்து அழவே

நித்தமாய்த் துடித்து நிற்கின்றேன்

மாசுபடா உருவம் தேடியே

காணாமல் ஏங்கியே தவித்தோமே

கண்டசி வாழ்வை எம் வீட்டில் முடிந்தீரே

கெஞ்சியும் வரமுடியாத் தூரம் சென்றீரே

பேரனோடு தினம் இருந்து கைப்பணிகள் செய்தீரே

ஏமாற்றிச் சென்றவிதம் இதுதானா?

உங்கள் வரவிற்காய் தினம்தினம் தவிக்கின்றோம்

மீண்டும் வந்தே எந்தையாய்ப் பிறக்கவே

ஆத்மா சாந்திபெறவே அனுதினமும் துதிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

நெஞ்சார எமையணைத்தே நேயமாய்
வஞ்சமில்லாப் பேச்சுப் சொல்லியே
அன்புகாட்டி வந்த மாமவே
சிந்தை கலங்க பரலோகம் சென்றீரே
மருமக்களாகவன்றி மக்களாய் எம்மை
பாங்குடனே பழகிவந்தீர்
ஆழ்ந்த அறிவுரைகள், சிந்திக்கும் யோசனைகள்
தேங்கி நிற்கும் உன்னுருவம் காணாது
வாடி நிற்கின்றோம் மாமா
அறிவுரைகள் நெஞ்சில் நிழலாடியே
எம்மை மாய்த்து நிற்க மறைந்த மாயமென்ன
நெஞ்சுருகித் துதிக்கின்றோம்
ஆத்மா சாந்தி பெறவே.

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

நினைக்க நினைக்க இதயம் கலங்குகிறதே
அம்மப்பா உயிர்காணாய் கண்கள் துளிர்கிறதே
பிறந்தபோது அன்புமுத்தம் தருவாயே
பொருட்காட்சி என்று சொல்ல
பொருள் செய்து தந்தாயே
ஆசைமுகம் காண இனி எங்கே செல்வோம் யாம்
மீண்டுமொருதடவை பிறப்பெடுக்க மாட்டாயோ
பிஞ்சினிலே எமையழைத்தே சோறூட்டி
அச்சமில்லாக் கதைகள் பல சொன்னாயே
தெய்வத்துள் தெய்வமாக நாமே
அனுதினமும் பிராத்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேறாமக்கள் புலம்பல்

அன்பூட்டி எமைவளர்த்த பெரியப்பா
இவ்வுலகுவிட்டு ஓடி மறைந்ததெங்கே
எம்தந்தையைக் காண்பது போல்
எந் நாளும் கண்டு நிற்போமே
மீளாப்பயணம் செய்யப்புறப்பட்ட மாயமென்ன
மீண்டும் வந்து சித்தப்பாவாய் பிறக்கமாட்டீரோ
அன்புமுகம் தேடி காணும் நாள் எதுவோ
உன் ஆத்மா சாந்திபெற மலர்தூவித் துதிக்கின்றோம்.

## உற்றார் புலம்பல்

கள்ளமில்லா உன்னுருவை
கடைசிவரை மறக்கமாட்டோம்
பசித்த ஏழைகளுக்காய் இரக்கம் கொள்வாயே
உந்தன் மரணச் செய்தி நெருப்பாய் போனதே
மீண்டும் ஒரு தடவை உறவுகொள்ள மாட்டீரோ.

## தேற்றம்

தேறு தேறு மனமே சித்தும் அசத்தும் இரண்டதனில்
தேறும் போதே இவ்வுடலும் தெளிவாய் அழியும் அசத்தென்றே
கூறும் பஞ்சபூதத்தால் கூட்டிய இந்தப் பண்டமது
நீறாய் நெருப்பில் அழிவதன்றி நிலைக்கும் உயிர்தான் அழிந்திலதே

(கவிதையாக்கம் : திரு.க.யோகானந்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் நினைவுகள்

அன்னையின் அரவணைப்பினையும்
தந்தையின் அறிவினையும் – எனக்களித்து
தவழும் வயதிலிருந்து எனை
அரவணைத்து வளர்த்த என் அன்பு அப்பப்பாவே! – இன்று
எனைத் தனியே தவிக்கவிட்டு வேறுலகம் காணச் சென்றீரோ.....!

நூறாயிரங்கோடி பூக்கள் இப்பூமியிலே
பூத்தாலும் – உங்கள்
வதனத்தின் மலர்விற்கு ஈடாகுமோ....!
இனிய மொழி பேசுவீரே
இன் முகத்துடன் பழகுவீரே– இன்று
இறைவனைக் காண ஓடோடிச் சென்றதேனோ....?

ஆகாயச் சூரியன் போல – எம்
குடும்பத்தை சிறப்புடன் வழி நடத்தினீரே – இன்று
ஆதவனையிழந்து திக்கி தடுமாறுகின்றோம் அப்பப்பா....!
எம் சோகத்தை நீக்க மீண்டும் வரமாட்டீரோ எம்மிடம்....?

இரவு பகலாய் எனை அழைத்து கதைபேசுவீரே....! – என்
மடியிலே கால் வைத்து உறங்கினீரே...
"உனக்கு துணையாய் நான் உள்ளேன்" என கூறினீரே – இன்று
துயரத்தில் மிதக்க விட்டு சென்றீரோ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருடம் அன்று புதுப்பொலிவுடன்
வாசலிலே கோலம் போட்டீரே....
புன்னகையுடன் எனக்கு ஆசி பல வழங்கினீரே...
புதுப்புது கதைகள் கூறி எனை
மகிழ்வித்தீரே- இன்று
என் கண்ணீரை துடைக்க மறுப்பதேனோ...?

என் வாழ்க்கைப் பயணத்தில்
ஜோதியாக என்னுடன் துணை நின்றவரே!
என் இன்ப துன்பங்களில் என்னுடன்
என்றும் துணைநிற்பவரே - இன்று
நான் கதறி அழும் குரல் உம் செவியிலே விழவில்லையோ...?

இத்தனை வருடம் எனை அரவணைத்த உங்களை - நான்
இனி வரும் நாட்களிலாவது என் ஊதியத்தில்
இன்புற எண்ணியபோது... - என்
கனவுகளில் மண்ணைத்தூவி மண்ணுக்குள் மண்ணாக மறைந்ததேனோ...?

படைத்தவனுக்கு கூட உன்மேல் பிரியம் அப்பப்பா- ஆதலால்
தானோ சித்திர குப்தன் உம் மரணத்தேதியை
சீக்கிரம் குறித்தானோ....?
இறைவன் கூட இரக்கமற்றவனோ...?

உங்கள் பிறந்த நாளுக்கு வாழ்த்து தெரிவிக்க
நினைத்திருந்தேன் அப்பப்பா - ஆனால்
உங்கள் பூதவுடலுக்கு மாலையணிவித்து
வாய்க்கரிசி போடுவேன் என்று நினைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பல இருந்தாலும்
உம்மை போல எனக்கு துணையார்
என் அன்பு அப்பப்பாவே – என்
சோகம் தீர்க்க வாரும் அப்பப்பா ....! – நான்
கதறி அழுதும் உம் மனம் கரையாது இருப்பது ஏனோ....!

இன்னொரு ஜென்மம் ஒன்றினிலே
மீண்டும் நான் உங்கள் பேரனாக வேண்டும்
காலம் முழுவதும் உங்கள் அரவனைப்பிலே வாழ வேண்டும்
உமக்கென எனை அர்ப்பணிக்க வேண்டும் அப்பப்பா!

காலன் உங்கள் உயிரை பறிக்க வந்த போதும்
இரவு பகல் கண்விழித்து இருந்தேனே– இன்று
நீங்கள் இராஜதூக்கம் கொள்ள எனைத் தனியே
தவிக்க விட்டு வேறுலகம் காணச் சென்றது சரிதானோ!

காலங்கள் பல சென்றாலும்
உள்ளக் காயங்கள் மறைவதில்லை
நிழல்கள் மறைந்தாலும் – உங்கள்
நினைவுகள் என் மனதை விட்டு அகல்வதில்லை.....

என்றும் உங்கள் நினைவுகள்
பிரகாஷ் (பேரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பையும் அறிவையும்
நாள்தோறும் எமக்களிக்க
ஆனந்தமாய் நாம் களித்த
காலங்கள் எங்கோ!

பாடங்களில் சந்தேகம்
தீர்த்து வைத்தீர் பலவகையில்
விளக்கமதை நன்றாக்க - நீர்
கூறிய கதைகள்தான் எங்கோ!

பேச்சிலும் பாட்டிலும்
நடனத்திலும் நாடகத்திலும்
எனக்களித்த ஊக்கமதை
இன்றளிக்க நீர் எங்கோ!

பாலர் வகுப்பதனில்
பொருட்காட்சிப் பொருட்களை
எனக்கும் என்நண்பருக்கும்
உருவாக்கிய நாட்கள் எங்கோ!

பண்பாடு பழக்கவழக்கம்
உதவி செய்யும் மனப்பாங்கு
அனைத்தையும் அறியவைத்து
சென்று விட்டீரே எங்கோ!

நடன அரங்கேற்றத்தை
காண்பதற்கு காத்திருந்தீர்
இன்று, கண்டு கொள்ளாமல்
சொல்லாமல் போனது எங்கோ!

எனக்கு பாராட்டு என்றால்
உமது விழியிலே ஆனந்தக் கண்ணீர
அப்பப்பா! உங்கள் கண்ணீரே எப்போதும்
என் வாழ்வின் ஆசீர்வாதம்

பாசமிகு பேத்தி
துவாரகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்பு அப்பப்பாவே!

எங்கு சென்றீர் எனை விட்டு....

எல்லா இடமும் தேடி விட்டேன் – என்

முன்னே வர மாட்டீரோ............?

என் அம்மா அடிக்க வந்த போதெல்லாம்

என்னை அணைத்து முத்தமிட்டு

குளப்படி செய்யாதே என்பீர்களே – இன்று

மனமுருகி அழுகின்றேன் ஆதரவு கூற மாட்டீரோ?

பள்ளி செல்லும் போது – என்

பாதணிகளை பளபளக்க வைப்பீரே

இங்கு நான் கதறியழுகின்றேன் – ஓர்

பார்வை பார்க்க மாட்டீரோ....?

கைவேலை பல செய்து தந்தீரே!

கல்லூரியில் என் பெயர் நிலைக்க

உம்மை நீரே வருந்தினீரே! – இன்று

நீங்கள் கடவுளிடம் சென்றதேனோ.....?

என் செல்ல அப்பப்பாவே

என்னுடன் செல்லம் கொஞ்ச வருவீரோ?

எனையணைத்து ஆசை முத்தம் பொழிவீரோ?

செல்லப் பேரன் கிஷான் குட்டி அழைக்கிறேன்

ஓடோடி வாங்கோ......

அன்புப் பேரன்
கிஷான் குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அண்ணாவுக்கு

காலம் கரைபுரண்டோடி, காட்சிகள் மாறி, கனடாவில் புலம் பெயர்ந்து என்னதான் வசதியான வாழ்க்கையை வரித்துக்கொண்டாலும், எத்தனைதான் பிள்ளைகள் பேரப்பிள்ளை என்று செல்வாக்கும் பெற்றிருந்தாலும், எனது சிறுவயதில் (ஒரு அரை நூற்றாண்டுக்கு முன்) அப்பா, அம்மா, அண்ணா, தங்கை என்ற நால்வரை மட்டுமே என் குடும்பமாக ஏன்? என் உலகமாகக் கொண்டிருந்த அந்தப் பொன்னான காலம் இன்னமும் பசுமையானது எனது பத்து வயதில் என்னை பருத்தித்துறை போடிங் ஸ்கூலில் சேர்த்த நாள் முதல், நான் இந்தியா சென்று பட்டப் படிப்பு முடித்து வீடு திரும்பிய காலம் வரை "அன்புள்ள அண்ணா நான் இங்கு சுகமாயிருக்கிறேன். உங்கள் சுகமறிய ஆவல்" என்று பல்லவி பாடிய என் கடிதங்களுக்கெல்லாம் "பட்சமுள்ள தங்கை சகுந்தலா அறிவது" என ஆரம்பித்து மணியான எழுத்துக்களால் நாலே வரிகளில் ரத்தினச் சுருக்கமாக நீங்கள் எழுதிய கடிதங்கள், என்மீது ஏற்படுத்திய தாக்கங்களோ அளப்பரியது. அவை சுமந்து வந்த செய்திகள் மறைமுகமாக எனக்குத் தைரியமூட்டியவை.

எனது பன்னிரண்டாவது வயதில், உங்கள் முதற் சம்பளத்தில் வாங்கித் தந்த கைக்கடிகாரம் தொடக்கம் போடிங் ஸ்கூலில் நான் தொலைத்துவிட்டு வந்த பிளாஸ்டிக் பெல்ற்றை இரகசியமாக கடையில் வாங்கி என் பெட்டியில் வைத்து, அம்மாவிடம் அடிவாங்காமல் என்னைக் காப்பாற்றியது வரை நீங்கள் என்மீது காட்டிய கரிசனைக்கு எடுத்துக்காட்டுகளோ ஏராளம். அவற்றை யெல்லாம் சொல்லி என்ன? அத்தனையும் இனி இல்லை என்றாகி, ஒரு வெறுமையை உணர்த்தி நிற்கிறது காலம். அப்பா அம்மாவை இழந்த போது கூட எனக்கு இத்தனை மனமுடைவு ஏற்படவில்லை. ஒரு சகோதரத்தின் அருமை, அதுவும் ஒரே சகோதரத்தின் மகிமை சொல்லிலடங்காதது. யாருக்கும் சிரமம் கொடுக்காது, யாரையும் நோகடிக்காது, அர்த்தராத்திரியில் அமைதியாகப் போய்விட்ட உங்கள் ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.

தங்கை சகுந்தலா

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு திறமைகள் பொதிந்த பல்கலைக்கழகம்

உடல் தளர்ந்தாலும் மனம் தளராது செயல்பட்டுக் கொண்டிருந்த அமரர் திரு. தாமோதரம்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் மரணச் செய்தி தொலைபேசி மூலம் அறிந்து மிகவும் ஆடிப்போனேன் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கையைத் திட்டமிட்டு வாழ்ந்த அமரர் இராசரத்தினம் அவர்களுடன் மிக நெருங்கிப் பழகியவர்களில் நானும் ஒருவன் அப்போது நான் அவரைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பரிணாமங்களில் கண்டுள்ளேன்.

அமரர் அவர்கள் அதீத கடவுள் நம்பிக்கையுடையவர் இவர் தன் இறுதிக் காலத்தில் பல்வேறு புண்ணியத்தலங்களுக்குச் சென்று பாவச் சுமைகளை இறக்கி வைத்தவர் இவர் வெல்லனிற் பிள்ளையார் முன் உளமுருகிக் கண்ணீர் மல்க வணங்குவது அவரை நல்ல கடவுள் பக்தனாக எனக்குக் காட்டியது.

இவரிடம் பல நல்ல குணாம்சங்கள் காணப்பட்டன. அந்த நல்ல குணாம்சங்கள் அத்தனையையும் தன் பிள்ளைச் செல்வங்களுக்கும் ஊட்டி அவர்களை தன் நலம் கருதாது மற்றவர்களுக்கு உதவும் நற்பண்பாளர்களாக வாழ வழிகாட்டியதுடன் அவர்களது மனதுக்குகந்த நல்ல வாழ்க்கைத் துணைகளையும் தேடிக் கொடுத்து அவர்களின் வளமான வாழ்வுக்கு வழிசமைத்த நல்ல தந்தையாகவும் அவரைக்கண்டேன்.

தனது பால்ய நண்பர்களில் ஒருவர், இவர் சிங்களவர் காலியில் மரணமடைந்த செய்தி அறிந்ததும் தனது தள்ளாத வயது யுத்த மேகங்களால் ஏற்பட்ட போக்குவரத்துச் சிரின்மை என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது எப்படியும் தன் நண்பனின் உடலையாவது பார்த்திடவேண்டும் என்று தன்னந்தனியாகவே காலிக்குப் புறப்பட்டுச் சென்ற போது சிறந்த நட்புக்கு இலக்கணமாகவே அவரைக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நல்லாசிரியரின் மகனாகப் பிறந்ததாலோ என்னவோ எழுத்தறிந்தவன் இறைவன் என்பதற்கிணங்க ஆசிரியர்களைப் பெரிதும் மதித்தார். அதுபோல் தன் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் நடக்கப்பழகியிருந்தார். ஆசிரியர்கள் எவ்வுதவி கேட்டாலும் அவ்வுதவிகளை உடனே செய்து விடுவார். இதன்மூலம் ஆசிரியரை தெய்வமாக மதிக்கும் பண்பாளனாக இவரைக் கண்டேன்.

1996ம் ஆண்டில் ஏற்பட்ட யாழ்ப்பாணம், வலிகாமம் என்பவற்றின் இடம் பெயர்வு மூலம் பலர் அகதிகளாக தென்மராட்சி, வடமராட்சி பகுதி நோக்கி இடம் பெயர்ந்தபோது பல அகதிகளுக்கு தஞ்சமளித்துத் தங்கவைத்தவர். அத்துடன் அவர்களின் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்திசெய்து உதவியவர் இதன் மூலம் இவரின் விருந்தோம்பும் பண்பைக் கண்டேன்.

அயல் ஆயிரம் பொன்பெறும் என்பதற்கிணங்க அயலவர் தேவையறிந்து உதவி செய்பவராக அமரர் திகழ்ந்தார். ஒரு முறை அயலவர் ஒருவரின் மகளின் திருமணத்தின் போது சிறு தடங்கல் ஏற்பட்ட போது அத்திருமணம் இனிதே நடைபெறுவதற்கு ஏதுவாக தன் வீட்டின் காணி உறுதியை பொறுப்பாக கைகொடுக்க முன் வந்த போது அயலவர்க்குதவும் பெருந்தன்மையைக் கண்டேன்.

இவர் தனது வீட்டினைக் கட்டிக் கொண்டிருக்கும் போது முன் கூட்டியே திட்டமிட்டு எச்செயலையும் சீர்படசெய்யும் திறன், கட்டடக் கலையில் இவருக்கிருந்த ஆழ்ந்து அறிவு, என்பவற்றை என்னால் காண முடிந்தது.

நடன ஆசிரியையான தன் மகள் நாட்டிய நிகழ்வுகளைத் தயாரிக்கும் சந்தர்ப்பங்களில் அவருக்கு நாட்டிய அசைவுகள் பற்றி ஆலோசனை வழங்கும் போது அமரரை நான் நாட்டியக் கலைஞனாகக் கண்டேன்.

பாலர்பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளின் போதோ அல்லது பாடசாலை விளையாட்டு போட்டிகளின் போதோ நடைபெறும் வினோத உடைப் போட்டிகளில் மரக்கறி மனிதன், பீடாக்காரி, பத்திரிகை மனிதன், குறி சொல்லும் குறத்தி போன்ற பாத்திரங்களை வித்தியாசமான முறையில் தன் பேத்தி துவாரகா மூலம் அறிமுகப்படுத்திய போது ஒரு திறமையான ஒப்பனைக் கலைஞனாக நான் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் வீட்டுச் சுவரில் தொங்கும் சித்திரங்கள் நெல்லியடி மெ.மி.த.க. பாட்சாலையின் மேடையை அலங்கரிக்கும் சரஸ்வதியின் உருவம் கொண்ட திரைச்சீலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் காணப்படும் சித்திரங்கள் மூலம் அவரை நல்ல சித்திரக் கலைஞனாகக் கண்டேன்.

நான் கடமையாற்றிய பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது தானே எழுதித் தயாரித்த சிறுவர் நாடகமொன்றை மேடையேற்றினார். அந்நாடகத்தின் காட்சி அமைப்பு, சிறுவர்களை வழிநடத்திய தன்மை என்பன எல்லோராலும் பாராட்டப்பட்ட ஒன்று இதன் மூலம் நல்ல நாடகக் கலைஞனாக நான் அமரரைக் கண்டேன்.

இப்படி பல திறன்களையும் நல்ல குணாம்சங்களையும் தன்னுள் அடக்கி வைத்திருந்த அமரர் இராசரத்தினமவர்கள் இலங்கையின் இடது சாரிக்கொள்கைகளின் தந்தை என அழைக்கப்படும் காலஞ்சென்ற S.A. விக்கிரமசிங்க அவர்களை தன் அரசியல் வழி காட்டியாகக் கொண்டு சமதர்மக் கொள்கைப்படி வாழ்ந்தவர். அவருடன் நெருங்கிப்பழகிய எனக்கு அவர் ஒரு பல்கலைக்கழகமாகவே தெரிந்தார். இப்படிப்பட்ட உத்தமமான உறவினரின் இழப்பு எனக்கு ஈடுசெய்யமுடியாத ஒன்று.

இருப்பினும் பிறப்பு என்பது தற்செயல் இறப்பு என்பது நிச்சயம் என்பதற்கிணங்க நல்லதையே நினைத்து நல்லதையே செய்த அமரரின் ஆன்மா இறைவனடியையே சேரும் என நம்புவோம்.

அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சந்நிதி முருகனை வேண்டுகிறேன்.

சாந்தி சாந்தி சாந்தி

வ. கணேசமூர்த்தி
அதிபர்
யா/ தொண்டை மானாறு
வீரகத்திப்பிள்ளை ம.வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனிய இராஜரட்ணம்

"அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது" என்றாள் ஔவை மனிதப் பிறப்பு ஓர் உன்னதப் பிறப்பு மனித உடல் எடுத்தவர் எல்லாம் மனிதராகி விட முடியாது. மனதை உடையவன் மனிதன் 'மனிதம்' உடையவன் மனிதன் மனிதப் பண்புகள் அனைத்தையும் 'மனிதம்' என்பது சுட்டும்.

கற்றவர் நிறை யாழ்ப்பாணம் - கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராஜரட்ணம் இவ்வுலகினை விட்டுச்செல்லும் வரை மனிதராக - புனிதராக இனிமையாகப் பழகும் பண்பாளராக வாழ்ந்தவர். கரவெட்டியில் இருந்த பிரசித்தமான 'செல்லம்' மில்லின் உரிமையாளர், மலையகத்தில் ரீ மேக்கராக இருந்தவர். சிறந்த தொழிலதிபர், மிகுந்த தமிழ்ப் பற்றுடையவர், கலையுணர்வு மிக்கவர், சைவசமயியாக வாழ்ந்தவர். தொழிலாளர் வர்க்க உரிமைகளையும் பொதுவுடமைத் தத்துவங்களையும் ஆதரித்தவர்.

எமது பாடசாலையான யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்துடன் தொடர்புடையவர். பாடசாலை வளர்ச்சியில் அக்கறை உடையவர். இவரது மகள் கௌசல்யா இப் பாடசாலையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தொண்டர் ஆசிரியராக கடமையாற்றினார். 2000ம் ஆண்டு நடைபெற்ற 'மிலேனியம்' பொருட்காட்சி நிகழ்வில் முன்னின்று உழைத்தவர். அக்கண்காட்சியில் மாணவர்கள் பயன்பெறத்தக்க தேசப்பட ஆக்கங்களை தாமே வரைந்து காட்சிப்படுத்தியவர். சிறந்த ஓவியர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலையில் 'தமிழ் இன்னியம் - பாரம்பரிய இசை வாத்தியங்கள் ஒலிப்பதற்கு அத்திவாரமாக இருந்தவர். விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்ற நிகழ்வுகளில் முன்னின்று உழைத்தவர்.

இந்துமதம் தமது சொந்த மதம் என்ற அசையாத கொள்கை உடையவர். கரவை வெல்லன் பிள்ளையார் (கிராய்) மீது மிகுந்த காதல் உடையவர், சதுர்த்தி, கந்தஷஷ்டி, பிள்ளையார் கதை போன்ற விரதங்களை முறையே அனுஷ்டிப்பவர். கோயில்களில் இடம்பெறும். கந்தபுராணம் பாராயணங்களில் ஈடுபாடுடையவர்.

இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று. அன்னாரது ஆத்மா கரவை வெல்லன் விநாயகரிடம் தான் சென்றடைந்தது என்பதில் ஐயமில்லை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்றும், பெருமை உடைத்து இவ்வுலகு"

திரு.க.பொன்னையா (அதிபர்)

யா /கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குலதெய்வம்

அமரர் தாமோதரம் இராஜரட்ணம்

அவர்களினது மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், உள்ளூரிலும், வெளிநாடுகளில் இருந்தும் அனுதாப செய்திகளை தொலைபேசி மூலமும், தந்திமூலமும் தெரிவித்த அனைவருக்கும், எமது துக்கத்தில் பங்கு கொண்ட, அன்புள்ளம் கொண்ட எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர்மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், மிக குறுகிய நாட்களில் கவிதையாக்கித்தந்த ஆசிரியர் திரு. க. யோகானந்தன் அவர்களுக்கும், இன்று நடைபெறும் ஆத்மசாந்தி கிரியைகளில் பங்கு பற்றி சிறப்பித்த சிவாச்சாரியார் மற்றும் அன்பர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

101/4, கந்தசாமிகோவில் வீதி,
திருகோணமலை
026-2224454

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

சின்னத்தம்பி + வள்ளியம்மை

...சுமி

இளையதங்கம்

வேலுப்பிள்ளை

தங்கம்மா

ஆழ்வாப்பிள்ளை + லட்சுமி

வேதாத்தை
+
✳ கந்தப்பு

சரஸ்வதி
சிவப்பிரகாசம்
மனோன்மணி

✳ கணபதிப்பிள்ளை
+
சரோஜினிதேவி

ஜெயந்தி
ஜெயக்குமார்
ஜெயரூபன்

✳ செல்லம்மா

கனகம்மா
+
✳ திருநாவுக்கரசு

லக்ஷ்மன்
ரமணி
ஜெய்சங்கர்

ராசம்மா
+
பாலசுந்தரம்

சுரேஸ்
சுமதி
கோணேஸ்
ரமேஸ்

கலா
+
...மேந்திரராஜ்

...அநுஷாந்
...க்ஷான்

கௌசலா
+
ஜெயமூர்த்தி

✳ நிஷாந்
கிஷாந்
துஷாந்
தர்ஷாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்



"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org